இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# பகிரங்க அறிவித்தல்

**கடந்த மார்ச் மாதம் 5ஆம் திகதி மற்றும் அதையொட்டிய தினங்களில் கண்டி நகரை அண்மித்த பகுதிகளில் வெறுப்பு மற்றும் மதப்பிரிவினைவாதத்தினால் ஏற்பட்ட வன்முறைகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு மக்களிடமிருந்து தகவல்கள் மற்றும் எழுத்து மூல சாட்சியங்களை சேகரித்தல்.**

1996 ஆண்டின் 21 இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் அதிகாரத்திற்கு அமைய மேற்படி சம்பவங்கள் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு அப்பிரதேசங்களிற்கு விஜயம் செய்து மக்களின் முறைப்பாடுகளை விசாரிப்பதன் மூலம் விசாரணை ஒன்றினை மேற்கொள்ளும்.

அவ்விசாரணையின் முதல் கட்டமாக இந்த சம்பவத்தினால் பாதிப்புக்குட்பட்ட, மற்றும் இந்த சம்பவம் தொடர்பாக அக்கறை கொண்ட நபர்களிடமிருந்து தகவல்கள் மற்றும் சாட்சியங்கள் சேகரிக்கப்படும். அத்தகவல்களை ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கும் போது 3 பக்கங்களுக்கு மேற்படாது இருக்க வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கும் தகவல்களில் சம்பவம் நடந்த திகதி, இடம், நேரம், சம்பத்தப்பட்ட நபர்கள் மற்றும் நிறுவனங்களின் பெயர்கள் ஆகியவற்றை உள்ளடக்க வேண்டும். சம்பவங்களின் புகைப்படம், ஒளிபட நாடா அல்லது ஒலிப்பதிவு நாடா ஆகியனவற்றையும் சமர்ப்பிக்க முடியும்.

இந்த எழுத்திலான தகவல்களினை 2018 ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி அன்றோ அதற்கு முன்னதாகவோ பதிவுத் தபாலில் கீழ் காணப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**பிரதேச ஒருங்கிணைப்பாளர்.**
**கண்டி பிராந்திய காரியாலயம்,**
**இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு**
**இல. 8/1, பிறிம்ரோஸ் வீதி,**
**பேராதெனிய வீதி,**
**கண்டி.**

இது சம்பந்தமான மேலதிக தகவல்களினை இல. 081-2228009 அல்லது 070-3654901 அழைத்து கண்டி பிராந்திய ஒருங்கிணைப்பாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

Dr. N. D. Udagama
Chairperson
Human Rights Commission of Sri Lanka

HUdagama

தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
06 ஏப்ரல் 2018